திராவிடநாடு

8—5—60 | வார வெளியீடு | விலை 16 காசு

மே திருநாள்

—[மான்]—

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில்நித்தம்
வதைபட்டுக் கொண்டிருந்த ஏழைமக்கள்
தோளுயர்த்தி நின்றார்கள் ஓர்நாள்
விண்ணப்பம் விடுத்தார்கள் உலகுக்கு
உழைப்புக்கும் பிழைப்புக்கும் இடையேஉள்ள
இடைவெளி கள்குறைக மக்கள்தொழிலுக்கு
தலைகுளிக என்றார்கள் அந்நாள்
மேநாள் மேதினிக்கோர் திருநாளாகும்!

எட்டு மணிநேரம் உழைப்பு உறக்கம்
எட்டு மணிநேரம் உல்லாசம் அவ்வாறே
கொட்டுங்கள் போர்முரசு என்றார்கள் வெற்றிக்
கொடிபிடித்து வந்தார்கள் தொழிலாளரெல்லாம்!
எட்டி விலகிற்று பகைக்கூட்டம்
தொழிலாளர் எழுச்சி ஆர்வம் புரட்சித்
தொட்டிலிலே வளர்கின்ற புதுமைக் குழந்தையே
நீவெல்க எனும் வீரவரலாற்றை எழுதிற்று!

"ஆப்பிரிக்கா! ஆப்பிரிக்கா!"

—(அன்பு)—

இதுவரை ஆப்பிரிக்கக் கண்டத்தை அலட்சிய நோக்குடன் பார்த்து வந்த உலகம், இப்போது ஆச்சரியத்துடன் நோக்கி அன்பும் ஆதரவும் காட்டவேண்டிய நிலைக்கு வந்துள்ளது. ஒரு சாதாரண பூகோளப் பிரதிபலிப்பு என்று அசட்டை செய்துவந்த உலக நாடுகள், இப்போது பூகோளப்படத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஆப்பிரிக்காவின் எல்லையிலேயே கண்ணோட்டம் விட்டு வருகின்றன. நாகரிகமில்லா இருட் கண்டம் என்று தன்னால் பெயரிடப்பட்ட அந்த நாட்டில் எழும்பும் தொனியைக் கண்டு தனது பழைய பல்லவியை மாற்றியமைத்துக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறது உலக சரித்திரம்.

கானாவையும் கினியாவையும், மொராக்கோவையும் டுனீஷியாவையும் தொடர்ந்து "ஆப்பிரிக்கா!ஆப்பிரிக்கா!" என்ற சுதந்திர ஒலி எங்கணும் கேட்டுக்கொண்டே வருகிறது. "ஆப்பிரிக்கா! அது எங்கள் காலத்திற்குள் மீண்டும் எங்களுக்கே வரட்டும்!" என்னும் இலட்சிய கீதம் அக் கண்டத்தின் பல பகுதிகளிலும் பாடப்பட்டு வருகிறது.

ஆனால் இதற்கெல்லாம் மாறாக, தென் ஆப்பிரிக்காவில் மட்டும் நிற வெறி, மனித உரிமையின் மீது வெறியாட்டம் ஆடி வருகிறது. தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள் சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசாதே என்கிறார்கள்; சமஉரிமையைப் பற்றிக் கனவிலும் நினைக்காதே என்கிறார்கள். அன்பும் மனிதப் பண்பும் அவர்கள் அகராதியில் பொருளில்லாச் சொற்களாக இருக்கின்றன. இருட் கண்டம் என்று அழைக்கப்பட்ட அந்த நாட்டின் ஒரு பகுதியை இரத்த வெள்ளத்திலாழ்த்தி நீந்தி மகிழ்கிறார்கள் வெள்ளையர்கள். ஆப்பிரிக்கர்களது நாட்டையையும் பறித்து அரசியல் உரிமையையும் பறித்தார்கள்; பின்னர் அவர்கள் வாழ்வையும் பறித்து மிருகங்களினும் கீழாக நடத்துகிறார்கள். இன்றைய தென் ஆப்பிரிக்க சர்க்காரின் ஆட்சியில் மிருகங்களும் வெள்ளையர்களும்தான் பயமின்றி வீதிகளில் நடக்கலாம், கூடிக் குலவலாம். அந்த நாட்டுக்குச் சொந்தமான மற்றைய ஆப்பிரிக்கர்களோ, தங்கள் கறுத்த உடலிலிருந்து சிவந்த இரத்தத்தை, தங்களுடைய அடிப்படை மனித உரிமையைப் பெறுவதற்காகச் சிந்திக்கொண்டிருக்கிறார்கள்.

கிருத்துவ மறை நூலின்படி, கடவுள், மோசஸ் என்பாரிடம் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். "திருடாதே, மனிதனை மனிதன் வெறுக்காதே" என்பது அதனுள் அடங்கிய இரு கட்டளைகள். இதன்படி நோக்கினால் இன்றைய தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள் 'திருடர்கள்' 'மனிதாபிமானமற்றவர்கள்'. அவர்களது கடவுள் அவர்களை நோக்கித் 'திருடாதே' என்று சொல்லிவிட்டுப் போனார். ஆனால் அவர்கள் தென் ஆப்பிரிக்கர்களுக்குச் சொந்தமான பூமியைத் திருடினார்கள். அவர்கள் போற்றும் பத்துக் கட்டளைகள் 'மனிதனை மனிதன் வெறுக்காதே' என்ற பாடத்தை அவர்களை நோக்கிச் சொல்லிக்கொண்டிருக்கிறது. அதனால் அவர்களோ, தென் ஆப்பிரிக்கர்களது அரசியல் உரிமையைப் பறித்ததோடல்லாமல் மனித உரிமைகளையும் தர மறுக்கின்றனர்; ஏன் என்று கேட்டால் கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லுகின்றனர். "அன்பும், சகோதரத்துவமும் உடையவனே எனது அருகில் இருக்கும் தகுதியுடையவனாவான்" என்று அவர்களது கடவுள் சொல்லிவிட்டுப் போனார். எனவேதான், அவை இரண்டையும் மறந்த ஒரு வெள்ளையனை, மற்றொரு வெள்ளையன், நேரிய வழி அல்ல என்று தெரிந்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல நினைத்தான்.

சிறு பிள்ளைகளின் கூட்டு விளையாட்டுக்களில்கூடச்சில அடிப்படை ஒழுக்கங்கள், விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதுண்டு. கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் மீறி ஒழுக்கந்தவறிய விளையாட்டில் ஈடுபடும் ஒரு சிறுவனை மற்றச் சிறுவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து கண்டிப்பார்கள், அல்லது விளையாட்டினின்றும் விலக்கிவைத்துப் பாடம் கற்பிப்பார்கள்.

ஆனால், விபரம் அறிந்த மனிதர்களைக் கொண்ட உலகநாடுகளின் கூட்டு இயக்கத்திலோ, அரசியல் நாகரிகமும் மனிதப் பண்பும் "அரசியல் பின்னணி" என்ற இரும்புத் திரைபோட்டு மறைக்கப்படுகின்றன. மனிதன் உண்டாக்கிய அரசியலமைப்புக்களே மனித உரிமைக்காகப் போராடும் ஒரு மனித இனத்துக்கு உதவ முன்வருவதில் தயக்கமும் தாமதமும் காட்டி வருகின்றன. மனித தத்துவத்தை மறந்த ஒருமனிதனை, மனிததத்துவமுடைய ஒரு மனிதன் கொன்று பாடம் கற்பிக்க நினைத்தான். அப்படி நினைத்துச் செய்தது ஒரு குற்றம் என்று கூறி அவனைத் தண்டிப்பதில் உதவ இருக்கிறது ஒரு அரசியலமைப்பு. ஆனால், அமைதியாக மனித உரிமை கோரிய மனிதர்களை மனிதப் பண்பில்லாமல் சுட்டவர்களுக்கு, உடனடியாகத் தக்க பாடம் கற்பிப்பதைத் தடுத்து நிறுத்தித் தாமதம் காட்டிக்கொண்டிருப்பதும் சில அரசியலமைப்புக்களின் செயல்தான்.

ஆயுத நிராகரிப்பிலும், அமைதிக்கு வழி காண்பதிலும் பெரும் தடையாய் நிற்கும் அரசியல் பின்னணிதான், இன்று தென் ஆப்பிரிக்கப் பிரச்சினைக்கு ஒரு நீடித்த

(4-ம் பக்கம் பார்க்க)

கொரியா (?)

லர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. | (8–5–60) | தனிப் பிரதி 16-காசு | [இதழ் 43

அரசியல் குழப்பங்களால் ஏற்கனவே சரித்திரப் பிரசித்திபெற்றுவிட்டது தென்கொரியா. அங்குதான், மீண்டும் இப்போது சரிதத்தில் பொறிப்பதற்கான ஒரு முக்கிய அத்தியாயம் அந்நாட்டின் குடிமக்களால் உருவாக்கப்பட்டுவருகிறது.

சமீபத்தில்தான் தென்கொரியாவிலிருந்து ஒரு செய்தி வெளியானது, டாக்டர் சிங்மன்ரீ மீண்டும் நான்காவது முறையாக நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று. ஆனால் அத்தேர்தலுக்குப் பின்னால் நீக்கமுடியாத ஒரு கறை படிந்த சரித்திரமே இருந்திருப்பது இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் விளைவுகளின் மூலமாகத்தான் உலகக் கண்களுக்கு தெரியவருகிறது.

உடல் தள்ளாடிய 85-வயதான முதுபெரும் கிழவர் டாக்டர் சிங்மன்ரீ; அவரது படத்தைப் பார்த்தால் முகமெல்லாம் காலத்தின் முதிர்ச்சியால் தோன்றிய தோல்சுருக்கங்கள். இந்தக் கிழவரா இப்போது நிகழ்ந்திருக்கும் நூற்றுக்கணக்கான கொலைகளுக்கும் காரணமானவர் என்று எண்ணும்படியான 'வெள்ளை மனம்' உடையவர்போன்ற தோற்றம்.

ஆனால் இவரது "ஒரே மனிதர் ஆட்சிமுறை" என்ற அமைப்பினால் விளைந்ததுதான் தற்போதைய தென்கொரியக் குழப்பம்.

பதவி ஆசையே இந்தக் கிழவரின் மூச்சு. ஆதிபத்திய உணர்வே இந்தப் பெரியவரின் உணவு. போலிசும், இராணுவமும் தான் காலத்தால் தள்ளாடிய இந்தமனிதரின் கால்களும் கைகளும். காரண காரியமற்ற கம்யூனிச எதிர்ப்புப்பார்வைதான் இவரது கண்களிலின்றும் வெளிவருபவை. ஒரு நாட்டின் அரசியலை நடத்த இவருக்குத் தேவைப்பட்டது ஒரே நாற்காலிதான். அதில் அமர்ந்து வந்தவரும் இந்த ஒரே மனிதர்தான். நாட்டில் ஊழலையும் இலஞ்ச விவகாரங்களையும் உண்டாக்கிவருவதுதான் இவரது அரசியல் வேலை. தேர்தலைத் தனக்குச் சாதகமான முறையில் "எந்தவழியிலும்" நடத்திக் காட்டுவதுதான் இவரது விருப்பம்.

இவையெல்லாம் கலந்த இந்த ஒரே மனிதர் ஆட்சிதான் இவரால் கடந்த 12 ஆண்டு காலமாகத் தென்கொரியாவில் நடத்தப்பட்டது. டாக்டர் சிங்மன்ரீயின் "நாகரிகமான" இத்தகைய ஒழுக்கக் கேடுகள் நிறைந்த மிகுந்த ஆட்சி முதலில் மாணவர்களின் கருத்தைத்தான் கவர்ந்தது. மாணவர்களும் மக்களுமாக ஒன்று சேர்ந்தனர். 'ஆட்சியிலிலுள்ள ஒழுக்கக் கேடுகளை அகற்று' என்ற முதற்படியில் நிற்கவில்லை மக்கள். "இந்தத் தலைவனும் வேண்டாம் இந்தத் தலைவனின்கீழ் அமைந்த ஆட்சியும் வேண்டாம். நீ ஆட்சியில் உள்ளவரை இலஞ்சமும்ஊழலும் சர்வாதிகாரமும் இந்நாட்டைவிட்டு நீங்காது. எனவே எங்களுக்கு நீயும் வேண்டாம் உனது ஆட்சியும் வேண்டாம். இந்த நாட்டின் ஆட்சிமுறையே பரிசுத்தமாக்கப்படவேண்டும்" என்ற போராட்டக் குரலிட்டு நாடே திரண்டெழுந்தது. இதை முறியடிக்க நாட்டின் படை முழுமையும் நாட்டின் மக்கள்மீது மோதவிடப்பட்டது. கம்யூனிச வடகொரியாவின் எல்லையோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பெரும் இராணுவ சக்திகளனைத்தும் திரும்ப அழைக்கப்பட்டு மக்கள்மீது திருப்பிவிடப்பட்டது. இவையனைத்தையும் பிரசுரித்த தென்கொரிய பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டு அந்தச் செய்திகள் வெளியான இடங்கள் வெறும் வெள்ளைக் காகிதங்கள் வெளிவந்தன.

தென்கொரியாவில் எழுந்த பிணவாடை உலகெங்கும் வீசியது. தென்கொரியாவின் ஆதரவு சக்தியான அமெரிக்காவே தென்கொரியாவின் ஊழல் நாற்றம் தாங்காமல் மூக்கை இறுகப்பிடித்தது. இதற்கிடையில் தென்கொரியாவில் டாக்டர் ரீயின் எதேச்சாதிகார உணர்ச்சியின் சுருதி சிறிது குறைந்தது. அவரும் அவரது முக்கியஸ்தர்களும் நாட்டின் எந்த மூலைக்குச் சென்றால் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்ற நிலைக்கு வந்தனர். அரசியல் பதவி தனது குடும்பச் சொத்து என்ற அடிப்படைக் கொள்கையைக்கைவிட்டுத்தான் ஆகவேண்டும்என்ற நிலை வந்தது. பெயரளவில் இருந்த மந்திரி சபை கலைக்கப்பட்டது. புரட்சியின் நோக்கம் நிறைவேறவில்லை. தனது நிர்வாகப் பதவியைத் துறந்து பெயரளவில் மட்டுமே ஜனாதிபதியாக இருப்பேன் என்றார் ரீ. கொதித்தெழுந்த மக்களின் நோக்கம் நிறைவேறவில்லை. பெயரளவுப் பதவியையும் துறக்கிறேன்; மீண்டும் தலைவர் தேர்தல் நடத்தட்டும் என்றார் மறுபடியும். அப்படியும் ஆங்காங்கே சிறு சிறு எதிர்ப்புக்கள் நிலவிக்கொண்டுதான் வருகின்றன. மனச்சான்று உறுத்தியதால் துணைத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த லீ என்பாரின் குடும்பமே தற்கொலை புரிந்துகொண்டது.

டாக்டர் ரீ அரசியலை முற்றிலும் துறந்து மீண்டும் பதவிக்கு ஆசைப்படாமல், சாதாரண குடிமகனாக வாழ்வைத் தொடங்குவது ஒன்றுதான் தென்கொரிய அரசியலை தூய்மையுடையதாக மாற்றுவதற்குள்ள ஒரே வழி என பத்திரிகையுலகமே திரண்டெழுந்து எழுதுகிறது. இதுவரை ஆதரவு காட்டி வந்துகொண்டிருக்கும் அமெரிக்காவின் கண்டனக் கணைகள் மட்டுமே ரீயின் ஆட்சியில் போக்கிரித்தனமாசுகள் நிலவியதை உறுதிப்படுத்துகிறது.

தென்கொரியாவில் இதுவரை இருந்துவந்திருக்கும் ஆட்சியில் இலஞ்சம், தேர்தலில்ஊழல், அரசியலில்தனிமனிதசர்வாதிகாரம்போன்ற ஜனநாயகக் கேடுகள் குறைகள் என்ற பொதுவான நோக்கில் உலக நாடுகள் சிரத்தையுடன் கவனிக்கப்படவேண்டியவை. ★

2-ம் பக்கத் தொடர்ச்சி

முடிவு காண்பதிலும் பெரும் தடையாய் உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஹாமார்ஷீல்டு, ஐ. நா. சட்ட திட்டத்தின் 2 (7)வது பிரிவைக் காட்டி, தெ. ஆ. பிரச்சினையில் உடனடி செயல்களில் தீவிரமாக இறங்குவதில் தயக்கம் கொண்டு, நீட்டோலை அனுப்புவதில் மட்டுமே திருப்தி கொள்வது இந்த அடிப்படையில்தான். இதே அரசியல் பின்னணியால்தான் காமன்வெல்த் நாடுகளின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஹெரால்டு மாக்மில்லனும், "காமன்வெல்த் அமைப்புக்கு மற்றைய உறுப்பு நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட உரிமை கிடையாது" என்ற மறுப்பொன்றைக் கூறிமுழுப் பொறுப்பினின்றும் தன்னை ஓரளவு விடுவித்துக் கொள்கிறார். இதே அரசியல் பின்னணிதான்பிரிட்டனும், பிரான்சும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தெ. ஆ. பிரச்சினை பற்றிய வோட்டெடுப்பினின்றும் தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலியது.

விடுதலை ஒலிகள் ஆங்காங்கே எழுப்பப்பட்டுவரும் இந்நாளில், இரு நூற்றுண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திருக்கவேண்டிய மனித உரிமைப் போர் நிகழ்வது உலக நாகரிகத்தின் பிற்போக்கு வளர்ச்சியைத்தான் காட்டுகிறது. "ஆப்பிரிக்கா! ஆப்பிரிக்கா! எங்கள் தலைமுறைக்குள் மீண்டும் எங்களுக்கே வரட்டும்" என்று அக் கண்டத்துக்கே உரித்தான சுதந்திர கீதம் எழுப்பப்பட்டுவரும் இந் நாளில், அதே கண்டத்தின் தென் மூலையில் "எங்களுக்கு எங்கள் மனித உரிமையை யாவது தா" என்றுகேட்டுப், போராடி உயிர்விடும் நிலையும் நிகழ்ந்து வருகிறது. ஆதிக்க உணர்ச்சிகொண்டு அடிமை நாடுகளை வைத்திருந்த பிரிட்டன், பிரான்சு, போர்ச்சுகல், பெல்ஜியம், ஸ்பெயின் முதலிய நாடுகளையே எதிர்த்து நின்று விடுதலை பெற்றுவிட்ட ஆப்பிரிக்க நாடுகளின் தென் கோடியில் 10 சதவிகிதமே மனித பலத்தைக் கொண்ட ஒரு சிறு ஐரோப்பியக் கூட்டத்தினர் 90 சதவிகித மனித பலத்தையுடைய அந்தப் பகுதியின் சொந்த மக்கள்மீது வெறியாட்டம் ஆடிவருகின்றனர். சமீபத்தில் நியாசிலந்தின் தேசியத் தலைவர் டாக்டர் பண்டா நியூயார்க் நகரத்தில் ஆற்றிய சொற்பொழிவொன்றில் கூறியுள்ளவாறு இந்த நிற வெறியாட்டத்தை எதிர்த்துத் தென் ஆப்பிரிக்கர்களது அறப் போராட்டம் இன்னும் பல அளவில் வலிமையோடு தோன்ற இருக்கிறது.

சுருங்கக் கூறினால் இன்றைய தென் ஆப்பிரிக்கப் பிரச்சினை உலக சரித்திரத்தின் இயக்கத்தில் ஒரு சிறப்பு அம்சம்; மனித உணர்வையே தட்டி எழுப்பியிருக்கும் மாபெரும் சோதனை. "எங்கள் நாட்டில் எங்களுக்கு உரிமை—அதுவும் மனித உரிமை" என்ற வாழ்வுப் போராட்டத்தில் இறங்கியிருக்கும் தென் ஆப்பிரிக்கர்களுக்கு 'அரசியல்,' 'நாடு' என்ற வேறுபாடுகளைக் காட்டித் தூர நின்று உதட்டளவில் அனுதாபத்தை மட்டுமே தெரிவிப்பது தென் ஆப்பிரிக்கப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்ட செயலாகாது. சடங்குச் சொற்களால் ஆதரவைக் கூறி கடமை தீர்ந்துவிட்டதாகக் கருதும் உலக நாடுகளும், அவைகளைக் கொண்ட அமைப்புக்களும் அங்கங்களும் ஒரு நீக்ரோ மாணவர் எச்சரித்துக் கூறும் கீழ்க்கண்ட வரிகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்:

"ஆப்பிரிக்காவில் நடப்பது ஒரு மனிதப் பிரச்சினை என்பதை நினைவில் கொள்ளுங்கள். இன்று அதற்கு ஒரு நிரந்தரமான முடிவு காணத் தவறினீர்களானால் அதே பிரச்சினை நாளை உங்களுக்கு நேரலாம்."

இதை உணர்ந்தது போலத்தான் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கப் பிரச்சினையில் சுய முயற்சியுடன் வலிய முன்வந்து பங்கேற்று கருத்துக்களைத் தந்தும் செயல்களை ஆற்றியும் வருகிறது. ஏனெனில், அமெரிக்காவில் நிறபேதம் ஒரு உலகப் பிரச்சினை என்ற அளவில்தான் வெளிவரவில்லையே தவிர, ஒரு உள் நாட்டுக் குழப்பம் என்ற அளவிலேனும் இருந்துகொண்டுதான் வருகிறது. எனவேதான் உலக நாடுகளனைத்தும் முதலில் "நாளை நமக்கும் இப்பிரச்சினை வந்து நேர்ந்துவிட்டால்......?" என்ற எண்ணத்தைத் தனக்குத்தானே கொள்ளவேண்டும். அப்போதுதான் தென் ஆப்பிரிக்காவில் நடக்கும் போராட்டத்தின் மனித உரிமை பற்றிய முக்கியத்துவம் புலப்படும்.

★

தி. மு. க.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள்

—[❋]—

நாட்கள் ஒத்திவைப்பு

மே திங்கள் 7, 8 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் **1960** ஜூன் திங்கள் **18, 19** (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் (பவானி அருகில்) நடைபெறும்.

'அறிவகம்' சென்னை-13
21—4—1960

தலைமைக் கழகம்,
(தி. மு. க)

காஞ்சீபுரம்

8-5-60

தம்பி !

என்ன, சிறிதளவு வாட்டமுற்றதுபோலக் காணப்படுகிறாய்! வீரத் திருமுகத்திலே விசாரக்குறிகள் தெரிகின்றனவே! வந்துற்ற இடுக்கண் யாது? வந்திடிலென்ன? வாட்டம்கொள்ளப் போமோ? வள்ளுவப் பெருந்தகையை மறந்தனையோ! இடுக்கண் வருங்கால் நகுக! என்றாரே. தமிழரின் நெறியினை அழித்திடவல்ல தீ நெறி தமிழகத்திலே நெளிந்திடக் கண்டபோதும், வள்ளுவர், இடுக்கண் தமிழ் இனத்தைத் தாக்கக்கூடும் என்று அறிந்து, அவ்விதமானதோர் தாக்குதல் ஏற்படினும், கவலைகொள்ளல் ஆகாது, கொண்டிடின் இடுக்கண்களை எதிர்த்து நின்று வெற்றிபெற இயலாது என்று எடுத்துக்காட்ட, நகுக! என்று கூறினார். குறள் நெறி நின்றிடும் குறிக்கோளுடைய, உனக்கு ஏற்படலாமா வாட்டம், வருத்தம்!!

மாற்றார்கள் மனம்போன போக்கிலே ஏசுவது கேட்டா வாட்டம்? மறக்குலத்துதித்தவனே! மார்பில் பாய்ந்த வேலினைப் பறித்தெடுத்து, மதகரிமீது வீசினனாமே உன் முன்னோரில் ஓர் வீரன், களத்தில்; மறந்தனையோ. வீசினான், என்ற உடன் வசைமொழியினை விருப்பம் தீருமட்டும், விசாரம் குறையும் அளவு, நானும் வீசவா, என்று கேட்கத்தோன்றும் தம்பி! ஆனால், வீரன் வேல் வீசியது, மதகரி மீது, சிறுநரிமீதல்ல, தெரிகிறதா!!

வசவாளர்களின் பேச்சல்ல, என் வாட்டத்துக்குக் காரணம்; பத்து ஆண்டுகளாக நமது கழகம் உழைத்துத் திரட்டிவைத்துள்ள செல்வாக்கை அழித்தொழிக்க, பணகுண்டுகளை மாற்றார், செய்து குவித்தவண்ணம் உள்ளனரே; அதனை எண்ணும்போது, கலக்கம் ஏற்படாவிடினும், பெருமளவு கவலை ஏற்படத்தானே செய்யும், என்று கேட்கிறாய். தெரிகிறது. எனினும், களம் செல்ல உறுதிபூண்ட வீரர், கையில் கிடைத்த கருவியைக் கூர்மையான தாக்கிக் கொள்வர். நமது கழகத்தவரும் அதே முறையில், தேர்தல் களத்துக்காகத் தேவைப்படும் பணபலத்தைத் தேடிடத் தலைப்பட்டுள்ளனர். சிறுதுளி பெருவெள்ளமல்லவா!! எனவே, அது குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதைவிட, உன் 'பங்கு' என்ன என்பதனை அளவிட்டுக் கொண்டு, காரியமாற்று, கவலை பறந்துபோகும்!!

“என்னென்னதான் கூறுகிறாய், கேட்போம், என்றுதான் அண்ணா! பதில் கூறாது இருந்தேன். வாட்டம் ஏற்படக் காரணம், மாற்றாரின் தூற்றலும் அல்ல, மனதை உலையச் செய்திடவல்ல எதிர்ப்பும் அல்ல, தேர்தலுக்காக அவர்கள் திரட்டிக் குவித்திடும் பணத்தைக்கண்டு ஏற்படும் பயமும் அல்ல! நெஞ்சிலே நிறைந்துள்ள

★ ‘தலயாத்திரை’

தோர் நேர்த்தியான இலட்சியம், எந்த இலட்சாதிகாரியையும் பொருட்படுத்தத் தேவையில்லை என்று கருதிடும், வீர உணர்ச்சியைத் தந்திருக்கிறது. என் வாட்டத்துக்குக் காரணம், இந்தக் கோடையின் கொடுமை, வேறொன்றும் அல்ல. என்று கூறிடுகிறாயா, தம்பி, உண்மை! உண்மை! பார்த்தாயா நான் காரணமற்றுக் கவலைப்பட்டுவிடுகிறேன்! உன் தெளிவும் துணிவும் நெஞ்சு உரமும் செயல் திறனும் எனக்குத் தெரிந்திருந்தும், சில வேளைகளிலே, தடுமாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. கோடையின் கொடுமை, வாட்டம் உண்டாக்கிவிட்டதா! ஆமாம், தம்பி! கோடை கொட்டத்தான் தொடங்கிவிட்டது. என் செய்வது! எவர் எப்பாடுபடினும், நமக்கு இன்பம் வேண்டும், என்று எண்ணுவோர், இந்தக் கோடையின் கொடுமையிலிருந்து தப்பி, குளிர்ச்சிமிகு இடங்கட்குச் சென்று மகிழ்ச்சிமிகு நிலை பெறுகின்றனர். கொளுத்தும் வெயிலில் பலரும் துடித்திடுகின்றனர்; ஒரு சிலருக்கு, குளிர்ச்சிமிகு குன்று இடமாகிறது. பச்சை, உலரும் நிலை இங்கு! அவர்கள் பாங்கான இடம் சென்று களிப்பினைப்பெறுகின்றனர். ஆனால் எல்லோராலும் முடிகிறதா! சிலர், பாபம், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வோமென்று, சட்டசபைக் கூட்டம், கோடையின்போது ஊட்டியில் கூடட்டும் என்றனர், கூடிற்று; சென்றனர்; விட்டாயா அவர்களை! ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி, ஊட்டியிலே ஊராள்வோர் உல்லாச வாழ்வு தேடுகின்றனர் காணீர்! இது முறைதானா, கேளீர்! என்று முழக்கம் எழுப்பினாய்! கோடையைக் கூடத் தாங்கிக்கொள்ளலாம், இந்த எதிர்ப்பைத் தாங்கிட இயலவில்லை என்று எண்ணிப்போலும், சென்ற ஆண்டு, உதகமண்டலம் சென்று சட்டசபை நடத்தியோர், இந்த ஆண்டு, வேண்டாமென்று விளம்பிவிட்டனர். ஒருவரிருவருக்குக் கோபம் ஏற்பட்டுத்தான் இருக்கும். இந்தச் சிறு கூட்டம் சொல்வதற்காக, நாம் ஊட்டி செல்வதை நிறுத்துவது, கேவலம்; அதுகளின் தலையல்லவா துள்ளும்! — என்று கூடப் பேசுவர்.

எனினும், ஊட்டியிலே உல்லாசமா? என்ற கேள்வியை எழுப்பியவர், சிறு தொகையினராக இருப்பினும், "ஆமாம்! ஏன் அங்கு செல்கிறீர்! உச்சிவெடிக்கும் வெயிலில் உழலும் நாங்கள், வரிப்பணம் கொட்டிக் கொடுப்பது, அதைவைத்துக்கொண்டு நீவிர், ஊட்டி சென்று, 'குளுகுளு' வாசம் செய்வதோ!! உமக்குத் தொண்டாற்றி வருகிறோம்! உங்களின் உண்மையான ஊழியர்கள் நாங்கள்! என்று மயக்க மொழிபேசி ஓட்டுகளைத் தட்டிப்பறித்துக்கொண்டு, இடம்கிடைத்ததும், ஓடுகிறீர்களோ, உல்லாசம் தேடி, எங்கள் பணத்தைப் பாழாக்க!! வெள்ளைக்காரன், குளிர்மிகு நாட்டுக்காரன்—கோடை ஆகாது என்றான். நீவிரும், வெள்ளைக்காரராகிவிட்டீர்களோ?" என்று கேட்டுக் கோபித்திடும் மக்கட்தொகையின் அளவோ, மிகப் பெரிதாகிவிட்டது. அதுகண்ட எவர்தான் அச்சம் கொள்ளாதிருக்கமுடியும்! எனவே, ஊட்டி வேண்டாம்; உள்ளது நிலைத்தால் போதும் என்று இருந்துவிட்டனர். ஒரு இரகசியம், கூறட்டுமா, தம்பி! இந்த முறையும் சட்டசபையை, ஊட்டியிலே நடத்துவது என்று, காங்கிரசார் 'வீம்பு' செய்திருப்பின், கழகத்தவர்கள் சும்மாவிட்டிடினும், பொதுமக்களிலே ஒரு பிரிவினர், ஊட்டி வாசத்தைத் தடுக்க 'மறியல்' செய்வது எனத் திட்டமிட்டிருந்தனர்!!

ஊட்டி, கோடைக்கானல், ஏற்காடு, போன்ற இடங்கள் செல்வதே, குற்றம் என்று கூற முற்படவில்லை. பொதுப்பணத்தைச் செலவழித்துக்கொண்டு ஏழை எளியோர் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி, கொடுத்திடும் வரிப் பணத்தை விரயம் செய்து, ஊட்டியில் உல்லாசம் தேடுவது, அக்ரமச்செயல். அதைத்தான் நமது கழகம் எடுத்துக்காட்டிற்று.

தவித்திடும்போது, ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று, மலைவளம் காட்டுவோம், அருவியின் அழகினைக் காட்டுவோம்; மலர்மணம் பெறட்டும், மனதுக்கு ஓர் மகிழ்ச்சி கிடைக்கட்டும், என்றல்லவா ஒரு அண்ணனுக்கு எண்ணம் ஏற்படவேண்டும். ஒரு நாளாவது, அழைத்துப் போனது உண்டா, பொழில் நிறை இடங்களுக்கு— என்று கேட்கிறாய், பார்வையால்! கூடாது என்பதல்ல தம்பி! இயலவில்லை என்பதுதான். கோடை, கொடுமைதான்! குளிர்தரும் இடம் செல்வது, மகிழ்ச்சி தரத்தான் செய்யும் — இல்லை என்றா கூறுகிறேன். ஆனால் இந்தக் கோடையிலே, தம்பி! நமது உடன்பிறந்தார்களிலே சிலர், பாரவண்டிகளை இழுத்துச் செல்கிறார்கள்—பார்த்தனையா? கால்களிலே, சாக்குத் துண்டுகளைச் சுற்றிக்கொண்டு, உருகிடும் தார்போட்ட பாதையில்!! மாடு இழுக்கமுடியாத வண்டிகள், தம்பி! முன்னே இருவர் தொட்டு இழுக்கிறார்கள்—பின்னிருந்து மூவர் முட்டித்தள்ளுகிறார்கள்! அவர்களோடு பிறந்தவர்கள்தான், நாம்!! நம்மிலே, சிலர், வண்டுகளும் தும்பிகளும் வட்டமிட்டு இசை எழுப்பும் பூங்காக்கள் நிறைந்த இடம் தேடிச்சென்று, உல்லாசம் பெற, எண்ணுவது கூடத் தவறல்லவா? அங்கு சென்ற பிறகு, இந்த நினைப்பு வந்திடின்? கோடை நம்மைத் தேடிவந்தல்லவா, கொட்டும்!!

நாமாகிலும், தம்பி! கோடையின் தாக்குதலில் மட்டும் சிக்கியுள்ளோம். கைவண்டி இழுத்துக்கொண்டு இல்லை. இன்னும் ஓர் பத்தாண்டுகள், 'ஏக இந்தியா' எனும் தத்துவம் நம்மைப் பீடித்துக்கொண்டிருக்குமானால், நம்மிலே, பலர், கைவண்டி இழுப்போராக வேண்டியதுதான்! ஆனால் ஒன்று! உழைப்பின் மேன்மையைப்பாராட்டி, நேருபண்டிதர் நம்மைப், பாராட்டுவார்!! அது கிடைக்கும், வண்டி வண்டியாக.

இன்று, நமது இனத்திலே எல்லோருக்குமே இந்த இழிநிலை வாராமலிருக்கிறதே என்பதை எண்ணித்தான் ஆறுதல் தேடிக்கொள்ளவேண்டும்.

காலுக்குச் செருப்பில்லையே என்று கஷ்டப்பட்டேன், காலே இல்லாத ஒருவனைக் காணுமட்டும்—என்று கூறினார் ஒரு பேரறிவாளர்.

தம்பி! ஊட்டியாகட்டும், ஏற்காடாகட்டும், நந்தி மலை ஆகட்டும், என்ன பிரமாதம் என்கிறாய், வா, நீ, உன்னை, இந்த இடங்களை எல்லாம்விட, எழிலுள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்கிறேன். நீ, அறிந்திருக்கிற, உல்லாச புரிகளிலே கார்மேகம் உலவும், சிறுதூறல் வீழும், பசும்புற்றரைமீது பல வண்ணப் பூக்கள் உதிர்ந்து அழகளிக்கும். அவ்வளவுதான்.

கொம்பர்த் தும்பி குழல் இசை காட்ட
பொங்கர் வண்டு இனம் நல் யாழ் செய்ய
வரிக்குயில் பாட
மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர்

காணவேண்டுமா? காட்டுகிறேன். கண்குளிரப் பார்த்திடு, காதுகுளிர இசை கேட்டு இன்புற்றிரு.

குரவமும், மரவமும், குருந்தும், கொன்றையும்
திலகமும், வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும், நாகமும், பரந்து அலர் புன்னையும்
பிடவமும், தளவமும் முடமுள் தாழையும்
குடசமும், வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும், வேங்கையும் பெருஞ் சண்பகமும்

மலர் வகைகள் உள்ளன தம்பி! ஏராளமாக! என்னென்ன வேண்டுமோ, பறித்துக்கொள்!! அதோ, பார்த்தனையா,

வெயில் நுழைபு அறியா
குயில் நுழை பொதும்பர்!

வெயில் நுழையாத பூங்கா! குயில் கூவுகிறது ஆங்கு இருந்துகொண்டு. தாமரை தெரிகிறதா, செந்தாமரை! அதன் பக்கம் பார்த்தனையா, வெண்ணிற அன்னம், அரசோச்சும் பாவனையில்!! கயல் துள்ளுவது கண்டனையா! கடுவன், மந்திக்கு, ஊசல் வேடிக்கை செய்திடும் காட்சி தெரிகிறதா!!

நந்தமிழகம் இருந்த நிலையினை இன்றும் நாம் கண்டு உவகை கொள்ளச்செய்யும் ஏடுகள், உள்ளனவே, அறியாயா? எடு, அவைகளில் ஒன்றினை! எழிலூர் செல்லலாம், ஏற்றமெலாம் காணலாம்!! காண்பது மட்டுமல்ல, அத்தகைய எழிலகமாகத் தாயகம் கோலம்கொள்ள, என்னென்ன பணியாற்றலாம் என்ற ஆவல் சுரக்கும். ஓய்விடம் சென்று, காய்கதிரோனிடமிருந்து தப்பினோம் என்று எண்ணி மகிழ்வதைவிட, இலக்கியம் எடுத்துக்காட்டும், சீரிடம் கண்டு, திருவிடம் விடுபட வழி காணவேண்டும். அந்தத் தொண்டினுக்கன்றோ, உன்னை நீ, ஒப்படைத்திருக்கிறாய்'! உன்னை, ஊட்டிக்கு வா, என்று அழைப்பது, உன் மாண்பினை நான் மறந்திடும் போக்காக வன்றோ ஆகிவிடும். நான் அந்தத் தவறு செய்திடப்போவதில்லை. எனவே, வா, தம்பி! வழக்கு மன்றம், போவோம்.

*

"குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?"

"செய்ததை ஒப்புக்கொள்கிறேன்—ஆனால் செய்தது குற்றம் அல்ல!"

"நீ செய்தது, குற்றமா அல்லவா, என்பதைத் தீர்மானிக்க நான் இருக்கிறேன். எனக்கு வழிகாட்ட, சட்டம் இருக்கிறது. துரைத்தனம் ஏற்படுத்தியுள்ள அனுமதிச் சீட்டு முறையை எதிர்த்துப் பேசினாயா?"

"ஆமாம்! அது முறை அல்ல! என் நாட்டிலே நான் நடமாட எந்த அனுமதியும், ஒரு அந்நியன், எனக்குத் தரவேண்டியது இல்லை, என்று பேசினேன்."

"மக்களைக் கூட்டிவைத்து?"

"என் மக்களை அழைத்துச் சொன்னேன்."

"சர்க்காருக்கு எதிராகத் தூண்டிவிட்டாய்?"

"அநீதிக்கு இடம் கொடாதீர்கள். அடிமைகளாகாதீர்கள் என்று கூறினேன். வீர உணர்ச்சியை ஊட்டினேன்."

"அதுதான், குற்றம்........"

"சட்டம், கூறுகிறதா?"

"ஆமாம்! படித்துக் காட்டவா?"

"படித்துக்கொள், உன் சட்டத்தை. நீயே!"

"நாட்டுக்காக, சட்டம்."

"என் நாட்டுக்கான சட்டம், இயற்ற வேற்று நாட்டுக்காரனுக்கு, உரிமை ஏது?"

"அரசாள்பவர்கள்தான், சட்டம் இயற்றுவார்கள்"

"அடிமைகள், அதை பயபக்தியுடன் ஏற்றுக்கொள்வார்கள்!"

"அப்படியா! வீரர்கள் என்ன செய்வார்கள்?"

"விரட்டி அடிப்பார்கள் அந்நிய ஆதிக்கத்தை."

"அதுதான், நீ, நடத்திவரும், சங்கத்தின் நோக்கமா........"

"ஆமாம்! எமது தாயகத்தில், வேற்றான் ஆதிக்கம், கூடாது ஒழிக்கப்பட்டாகவேண்டும், என்பதுதான்."

"வேற்றான்! பூ! வேற்றான்!"

"விளக்கமாகக் கூறட்டுமா........வெள்ளையன் ஆதிக்கம், அழிக்கப்படவேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம்."

"போதும்! இனித் தண்டனையைக் கேள்."

"தூக்கில் மாட்டினால், பழிக்குப்பழி வாங்க அணி அணியாக உள்ளனர், ஆப்பிரிக்க வீரர்கள். சிறையானால், வெளிவந்ததும் நானே கணக்குத் தீர்த்துக்கொள்கிறேன்."

*

தம்பி! வீரம் செறிந்த முகம்! பொறிபறக்கப் பேசுகிறான்! பிடிபட்டோம் என்பதுபற்றித் துளியும் அச்சமின்றி, வயது என்ன தெரியுமா? **36!** ஆமாம், தம்பி! குழந்தைகள் ஓடிஆடிக் கூவுவதை, துணைவி மகிழ்ச்சிப் பெருக்குடன் காண்பதைக் கண்டு களிப்படையும் பருவம். ஆனால், கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறான், குற்றவாளியாக!! சவுக்கால் அடிப்பார்கள் இரத்தம் பீறிட்டுக்கொண்டுவரும் அளவுக்கு. சிறையிலே தள்ளிப் பூட்டுவார்கள்; தெரியும் அந்த வீரனுக்கு. ஆனால் கலங்கவில்லை. அவன் விடுதலைப் போருக்காகவே, வாழ்கிறான். மங்காலிசோ சொபுக்வே எனும் பெயரினன்; ஆப்பிரிக்க மக்களின், விடுதலைக்காக அமைந்துள்ள கழகத்தின் காவலன். இரண்டு இலட்சம் உறுப்பினர்கள் உளர், அந்த வீரக் கோட்டத்தில்.

மங்காலிசோ விவரம் அறியாதவனுமல்ல. விவரம் தெரிவதால், சிலர் பயத்துக்கு அடிமையாகிவிடுவர். இன்ன காரியம்செய்தால், சட்டத்தின் இன்னபிரிவின்படி குற்றமாகும் அந்தக்குற்றத்துக்கு இன்ன தண்டனை தரப்படும்—என்ற விவரம், அச்சத்தைத்தானே எளிதிலே ஏற்படுத்தும். இந்த விடுதலை வீரன், கருப்பரை ஆள வெள்ளையர் என்ற முறையை ஒழித்தாகவேண்டும், என்ற உறுதி படைத்தவன். கிறபேதம், வெள்ளையர் கட்டிவிட்ட கயமை என்ற விவரம் தெரிந்தவன். பல்கலைக் கழகமொன்றிலே, மொழித்துறை ஆசானாகப் பணியாற்றியவன். மொழி, அவனை நாட்டுப் பற்றுள்ளோனாக்கிற்று! அந்த உணர்ச்சி, அவனை வீரனாக்கிற்று வீரனைக் கூட்டில் நிறுத்திற்று வெள்ளை வெறி! அவன் எதற்கும் துணிந்து நிற்கிறான். தாயகம் விடுபடவேண்டும் என்று முழக்கமிடுகிறான்; வழக்குமன்றத்தையேகூட அவன், தன் கருத்துரைக்க அமைந்த மன்றமாக்கிக்கொண்டான்.

தம்பி! அந்த அஞ்சாநெஞ்சன், இன்று ஆப்பிரிக்காவிலே, பல்வேறு பகுதிகளிலே தோன்றியுள்ள எழுச்சியின் சின்னம். எனினும், அவன் படித்து இன்புற, காட்டிப் பெருமைப்பட, ஒரு திருக்குறள் இல்லை!! இங்கு இருக்கிறது—நாம் ஊமையராய் இருக்கிறோம்.

இழுத்துச் சென்று பூட்டுவார்களா, சிறையில்? என்று கேட்கிறாய். பூட்டட்டுமே! வீரம் அழிந்துபடுமா என்ன! பல்லரைப் பூட்டிப்பார்த்தனர்—புயல் பலமாயிற்று; வெளியே அனுப்பிவைப்பதன்றி வேறு வழியில்லை. சிறையில் தள்ளப்பட்ட, மற்றோர் வீரன், வெளியே வந்து வீரமுழக்கம் செய்கிறான், காணலாம் வா, தம்பி!

*

"டாக்டர்! தங்களை விடுவிக்க வந்திருக்கிறேன். புறப்படலாம். இனி, சிறை அல்ல, உமக்கேற்ற இடம்."

"விடுதலை, எனக்குமட்டுந்தானா! நாட்டுக்கு?"

"நாட்டுக்கான திட்டம் குறித்து கலந்துபேச, அழைக்கிறார்கள்—தங்களை."

"அதற்காக என்றால் மிக்க மகிழ்ச்சியுடன் வருகிறேன்."

*

தம்பி! இரண்டாண்டுகளாகச் சிறையில் தள்ளி வைத்தனர், நியாசாலாந்து நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை நடத்திய, டாக்டர் பண்டாவை.

டாக்டர் பண்டா சிறைப்படுத்தப்பட்டால், கிளர்ச்சி அடங்கிவிடும் என்று எண்ணினர், ஏமாந்தனர். இரத்தப் புரட்சிக்கும் மக்கள் தயாராகிவிட்டனர். இனி, அவர்களைக் கட்டுக்குள் கொண்டுவந்தால்தான், தலைதப்பும் என்பது புரிந்துவிட்டது வெள்ளையருக்கு மக்களை கட்டுக்குள் கொண்டுவர ஒருவரால் மட்டுமே முடியும்,—அவர்தான டாக்டர் பண்டா. எனவே, விடுதலை!! சிறைச்சாலை சென்று, உயர்தர வெள்ளை அதிகாரி, டாக்டர் பண்டாவைக் கண்டு பேசி, வெளியே அழைத்துக்கொண்டு வந்தார்.

வெளியே வந்த தங்கள் தலைவனை வரவேற்க ஆப்பிரிக்க மக்கள், திரள் திரளாகக் கூடினர்; வாழ்த்தொலி முழக்கினர்.

வீரத் தலைவனே! வருக! வாழ்க!

வெற்றி பெற்றளிக்க வந்தோனே, வருக! வருக!

வெள்ளையரின் கொட்டம் அடக்கும் ஆற்றல் மிக்கோனே! வருக!

நாட்டுக்காகச் சிறைசென்ற, நாயகனே! வருக!

நாங்கள் செய்யவேண்டியது என்ன? கட்டளையிடுங்கள்! காத்திருக்கிறோம்!

பண்டா வாழ்க! பாதுகாவலன் வாழ்க!

விடுதலைக்கு வழிகாட்டியே வாழ்க!

வீரத்தின் சின்னமே. வெற்றியின் பிறப்பிடமே! வருக! வருக!

மக்களின் இதய ஒலி, டாக்டர் பண்டாவுக்கு ஆவேசத்தை மட்டுமல்ல, அதை முறைப்படுத்தும், அடக்க உணர்ச்சியையும் அளித்தது.

நாட்டுப்பற்று மிக்கோரே! நண்பர்காள்! உடன் பிறந்த உத்தமர்களே! உமது உள்ளன்புக்கு என் நன்றி! விடுதலை எனக்குக் கிடைத்தது நாட்டு விடுதலைக்காகப் பாடுபட! நான் சிறை மீண்டேன், இனி நாடு, வெள்ளையர் பிடியிலிருந்து விடுபடவேண்டும். அது குறித்துப் பேச அழைக்கின்றனர்; செல்கிறேன். வெற்றிக்காகக் காத்திருங்கள்! வெற்றி

கிடைத்தால், விழா! இல்லையேல், இறுதிப்போர்!! ஆனால், இடையில், கலாம் விளைவித்தல் ஆகாது. கல்லெறிந்தனர், பண்டாவின் தோழர்கள் என்ற கெட்ட பெயர் கூடாது. அமைதியாக இருங்கள். அதுதான் ஆற்றலின் அடையாளம். வீடுசென்று குதூகலம் தேடுங்கள்—விடுதலை தேடி நான் செல்கிறேன் வெற்றியுடன் திரும்பி வருகிறேன்! விழா கொண்டாடுவோம்.

டாக்டர் பண்டா இக்கருத்துப்படப் பேசுகிறார், தமது நாட்டவரிடம்.

இரண்டு ஆண்டுகளாக, அவரைக் காணாததால் ஏற்பட்ட ஏக்கத்தை ஒரே அடியாகத் தீர்த்துக்கொள்வதுபோல, மக்கள் அவரை, மறுபடியும் மறுபடியும் காண அழைக்கிறார்கள். மாடிமீது நின்று, மக்களைக் கண்டு மகிழ்கிறார் டாக்டர் பண்டா

•

தம்பி! அந்த நயாசாலாந்து நாட்டிலே, இலக்கியத்தை அகம் என்றும் புறம் என்றும், பிரித்து சுவைபடக் கூறிய புலவோர் இருந்ததில்லை. இங்கு இருந்தனர், எண்ணற்றவர்; பெண்பாற் புலவர்களுங் கூட!

•

இரண்டாண்டுகளுக்கு முன்பு, டாக்டர் பண்டா, இலண்டன் வந்திருந்தார், நாட்டுவிடுதலைக்கான பேச்சுவார்த்தை நடத்த. வெற்றிகிட்டவில்லை. வெறுங்கையோடு, ஆனால் வீர உள்ளத்தோடு, நாடு திரும்பக் கிளம்பினார். தன் நாட்டு விடுதலைகுறித்து உலகுக்கு ஒரு விளக்கம் அளிக்கவிரும்பி பிரபல பத்திரிகை நிருபர்களை அழைத்தார்; விருந்தும் வைத்தார். சிறியசந்து! அதிலே ஓர் பழையவீடு! அதிலே, வாடகைக்கு எடுக்கப்பட்ட ஒரு அறை' அங்குதான், நிருபர்களைச் சந்திக்க ஏற்பாடு. எத்தனையோ, நிருபர்களுக்கு டாக்டர் பண்டா, அழைப்பு அனுப்பினார். இரண்டே நிருபர்கள், வந்தனர். எவனோ ஒரு கருப்பன்!! நாட்டை மீட்கப்போகிறானாம்! இவன் பேசுவதைக்கேட்க, நாம் போகவேண்டுமா? என்று எண்ணிக்கொண்டனர். அவ்வளவு அலட்சியம்.

இம்முறை, விடுதலைபெற்று, டாக்டர் பண்டா இலண்டன் சென்றதும், 50-நிருபர்களுக்குமேல், அவரைச் சூழ்ந்துகொண்டனர், விவரம் கேட்க! ஒருவரிடமும், டாக்டர் பண்டா, பேசவில்லை. அலட்சியப்படுத்த முடிந்தது!

இந்த டாக்டர், இவ்வளவு குறுகிய காலத்தில், இத்துணை பெரிய ஆளாகிவிடுவார் என்று அப்போது தோன்றவே இல்லை. அன்று நாம், புத்தி கெட்டு, அவரை அலட்சியப்படுத்தினோம். இன்று, அவரைத் துரத்திக்கொண்டு போகிறோம், பேட்டி கிடைக்கவில்லை என்று எத்தனை நிருபர்கள் பேசிக்கொண்டனரோ, யார் கண்டார்கள்.

•

டாக்டர் பண்டா, புதிய எழுச்சியுடனும், நம்பிக்கையுடனும், பேசுகிறார்.

"அமெரிக்க மக்களே! ஆப்பிரிக்க மக்கள் எழுச்சியை அலட்சியப்படுத்துகிறீர்கள். இது ஆபத்தான போக்கு.

எப்போதுமே, மண்குதிரையைநம்பி ஆற்றில் இறங்கும் போக்கினைக்கொள்கிறீர்கள். சீனாவில் சியாங்கேஷேக்கை ஆதரித்தீர்கள் பலன் என்ன கண்டீர்கள்? இப்போதும் ஆப்பிரிக்காவில் வெள்ளை வெறியருக்குத் துணைநிற்கிறீர்கள். வேண்டாம், இந்த விபரீதபுத்தி!"

•

டாக்டர் பண்டா என்று ஒருவர், ஆழந்தெரியாமல் காலைவிடுவதுபோலக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். பிடித்திழுத்துச் சென்றனர், சிறைச்சாலைக்கு. வீண் கிளர்ச்சியில் இறங்காது இருந்தால், நல்ல பதவி கொடுத்திருப்பார்கள். வெள்ளையரின் தயவுபெற்று, செல்வவானாக வாழ்ந்திருக்கலாம் சிறையிலே, கிடக்கிறான், என்று கேலி பேசி இருப்பர், அமெரிக்கரில் பலர். விடுதலை இயக்கத்தின் ஆற்றலைப் பார், தம்பி! டாக்டர் பண்டா, அதே அமெரிக்கருக்கு, எச்சரிக்கை விடுக்கிறார்.

நயாசாலாந்து எமது தாயகம். எமது தாயகத்தில் வேறொருவன் எஜமானனாக இருக்க நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. ஏனெனில் எங்கள் நாட்டுக்கு நாங்கள் எஜமானர்களாக இருக்க உறுதிபூண்டுவிட்டோம்.

டாக்டர் பண்டா பேசுகிறார் தம்பி! இதுபோல. நியூயார்க் நகர மக்களிடம்!!

•

தம்பி! செங்காய் போன்று இனித்திடும் செய்திகள் கிடைத்திடும் இடங்கள் மட்டுமல்ல, விடுதலைக் கனிச்சாறு பருகி, இன்புற்று இருக்கும் இடங்களையும் காணுவோம்.

டோகோலாந்து என்றோர் நாடு. ஆமாம், தம்பி! இதுநாள்வரையில் பிரெஞ்சுப் பிடியில் இருந்துவந்ததால், பலருக்கு பெயர்கூட அவ்வளவாகத் தெரிந்திராது. அந்நாடு, இந்தக் கிழமை விடுதலை பெற்றுவிட்டது! விழாக்கோலமாம்! வீரக் களியாட்டங்களாம்! வீதிகளெல்லாம் கொடிகள், தோரணங்கள், வெற்றியை அறிவிக்கும் வளைவுகள்!

ஆப்பிரிக்க பூபாகத்தில், கானா நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள நாடு. சேரனும் சோழனும் செந்தமிழ்ப் பாண்டியனும் ஆண்டிட்ட திருநாடாக இருந்தாலென்ன, இப்போது பந்தும் பட்டிலும், ஷாவும் நவாசும், நேரு தலைமையில் இருந்து ஆள்கிறார்கள், இதிலென்ன இழிவு என்று இங்கு காமராஜரும் கக்கனும் பேசுவது கேட்கிறோம்.

டோகோலாந்து பாருக்கு நாகரிகம் வழங்கிய பிரான்சின் ஆட்சிக்கு உட்பட மறுத்துவிட்டது. —ஈராயிரம் ஆண்டு இணையற்ற வரலாறு காட்டி அல்ல; எங்கள் நாடு எங்களிடம் என்ற அரசியல் அரிச்சுவடி காட்டி. இங்கோ கல்லாதாரைத் தள்ளு, தம்பி! கற்றறிந்தோர் மட்டும் என்ன பேசுகிறார்கள்!

என் மொழி! என் நாடு! என்ற பேச்சு, குறுகிய மனப்பான்மை என்கின்றனர்.

டோகோலாந்து, இமயம் முதல் குமரி வரை உள்ள பாரதம் அல்ல! நாம் கேட்கும் திருவிடத்தைக் காட்டிலும், அளவில், வளத்தில், மிகவும் குறைவானதுதான். ஆனால் அங்கு, வீரர்கள் கிளம்பினர், விடுதலைக் கிளர்ச்சியைத் துவக்க; அனைவரும் வீரர் ஆயினர்; வெற்றி கிடைத்தது; மணிக்கொடி பறக்கிறது; மக்கள் மகிழ்கின்றனர்.

ஆப்பிரிக்க பூபாகத்தில் ஒரு பகுதிகூட அல்ல, தம்பி! மடகாஸ்கர். அடுத்துள்ள தீவு! அதுவும், இந்தத் திங்கள், விடுதலை பெற்றுவிட்டது, தனி அரசு ஆகிவிட்டது.

பிரெஞ்சுப் பிடியிலிருந்த, இந்தத் தீவு விடுதலைக் கிளர்ச்சியைத் தொடங்கியஉடன், பலமான, பயங்கரமான தாக்குதலைப் பிரான்சு அவிழ்த்துவிட்டது. பல ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். எத்துணை கொடுமைக் குணம் இருப்பினும், எத்தனை காலத்துக்குத்தான், படுகொலை செய்தபடி, ஒரு ஆதிக்கம் இருக்கமுடியும்?

எம்மைவிட்டா விலக விரும்புகிறீர்கள்? விலகினால், ஒரு உதவியும், துளிவசதியும் கிடைக்காது. ஆற்றுவாரற்று அலையநேரிடும். தேம்பித் தவிக்க வேண்டிவரும்.

தனி அரசு நடத்த என்ன தகுதி இருக்கிறது?

வீணாகக் கெட்டுப்போகவேண்டாம். வேண்டியதைக் தருகிறோம்.

பிரான்சு, ஆசைகாட்டிப் பார்த்தது; அச்சமூட்டிப் பார்த்தது மடகாஸ்கர், பணிய மறுத்தது; விடுதலை பெற்றுவிட்டது. தீவு, தம்பி! தனி அரசு ஆகிறது!! திருவிடம் தேம்பித் தவிக்கிறது!! ஏன்?

தம்பி! ஊட்டி சென்று என்ன பயன்? விடுதலை பெற்ற தலங்கள் சென்று, வீர உணர்ச்சி பெறவேண்டும்; விடுதலைப் போரினை வீரத்துடன் நடாத்திக் கொண்டுள்ள இடங்களைக் காணவேண்டும், உறுதி வலுவடையவேண்டும்.

தளைகள் உடைபட, தாயகம் விடுபட, இன்னுயிர் ஈந்திடவும் துணிந்து நிற்கும், வீரர்கள் உலவும் கோட்டம் செல்லவேண்டும்; வாட்டம் போகும்; வல்லமை மிகும்; வெற்றிப்பாதை, பளிச்செனத் தெரியும்.

ஆனால், அங்கெல்லாம் செல்ல, டில்லி அல்லவா அனுமதி தரவேண்டும்! எங்கிருந்து கிடைக்கும்! மலாயா போகவே, இயலவில்லையே. தடை விதிக்கிறதே, டில்லி. மடகாஸ்கரும், டோகோலாந்தும், நயாசாலாந்தும், அல்ஜீரியாவும் செல்லவா முடியும்? முடியாது என்பதால்தான், தம்பி! டில்லியின் அனுமதி தேவைப்படாத முறையில், அங்கெல்லாம் சென்றுவர, உன்னை அழைத்தேன். அந்த இடங்களைப்பற்றி, அங்கு நடைபெற்றுக்கொண்டு வரும் விடுதலைக் கிளர்ச்சிகள்பற்றி, படிக்கப்படிக்க தம்பி! கோழையும் வீரனாவான், கூனனும் நிமிர்ந்து நிற்பான்!

கோலமாமயிலும், கூவிடும்குயிலும்,மணமளிக்கும் தருவும் மாண்புமிகு மரபும், இறவாப்புகழ்பெறு இலக்கிய வளமும் இல்லாத நாடுகளெல்லாம் இன்று தனி அரசுகளாகின்றன. நாம் கேட்கும் திராவிடமோ, வரலாற்றுப் பேராசிரியர் துணை நிற்பினும், இலக்கிய விற்பன்னர்கள் சான்று தேடித் தரினும், காமராஜருக்குப் பிடிக்கவில்லை. அவரிடம் சென்று, டோகோலாந்தைப் பார்த்தீரா, மடகாஸ்கர் தெரியுமா? டாக்டர் பண்டா பற்றிக்கேள்விப்பட்டதுண்டா? என்றெல்லாம் கேட்டு, விளங்காத காரணத்தால் அவர் என்னை வெறிச்சென்று பார்த்தால், நான் எப்படித் தம்பி! அதைச் சகித்துக்கொள்ள முடியும்! எனவேதான், உன்னிடம் கூறினேன். சிதம்பரம் ஜெயராமன் செவி பழுதானவனிடம் பாடிக்காட்டி, என்ன பலன்? உடம்புக்கு என்ன? வாய் ஏன் இப்படிக் கோணிக் கொள்கிறது, என்றுதானே கேட்பார் செவி கெட்டவர்.

விற்பனையாளர்கள் கவனத்திற்கு

○○○

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் இதழ்களின் எண்ணிக்கை விபரத்தை ஒவ்வொரு கிழமையும் புதன் **கிழமைக்குள்** தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

அதேதான்! திராவிட நாடாவது கீடாவது, எல்லாம் சும்மா! அவா பேசறதோடு, சரி. ஆனா... எனக்குத் தெரியாதா என்ன... என்று பேசுகிறார். காமராஜர். அவர் முதலமைச்சராக வேறு இருக்கிறார்!!

எத்தனையோ இழி நிலைகளை, இடுக்கண்களை, தொல்லைகளைத் தாங்கிக்கொள்பவளல்லவா தமிழ்த் தாய்!

தன் மக்களிலே ஒரு மகன் ஊமையாகவோ, உன் மத்தனாகவோ இருந்துவிட்டால், தாய் என்ன செய்ய முடியும். வெறுத்துத்தள்ளிவிடவா முடியும்! மற்ற மக்கள், சிறிது அருவருப்புக் காட்டினால்கூடக் கடிந் துரைத்து, "அவன் இருக்கும் நிலைகண்டு இரக்க மல்லவா காட்டவேண்டும். வாய் இல்லை பேச. வகை இல்லை, தெளிவு பெற. நீதானே துணை இருக்க வேண்டும்." என்றுதானே கூறுவார்கள். தாய் உள்ளம், இன்னமும் நேர்த்தியானது—எந்தப் பிள்ளை ஊமையாகவோ உன்மத்தனாகவோ இருக்கிறதோ, அந்த மகனிடம் ஒரு தனிப்பரிவு (பரிதாபம் காரண மாக) காட்டுவாள். "அவன் பேசமாட்டானே தவிர, எல்லோரைக் காட்டிலும் அவன்தான் புத்திசாலி! பைத்தியம் போலக் காணப்படுவானே தவிர, பெரிய வேதாந்தி" என்று பேசும் தாயும் உண்டு.

அப்படியும் உண்டா என்று யோசிக்கிறாயா, தம்பி!

இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர்கூட வைத்திட, மனமுமின்றி இருக்கிறார் காமராஜர். ஆனால், அவரிடம் உள்ள ஆசையால், பெரியார், பச்சைத் தமிழர் என்றல்லவா அவருக்குப் பட்டம் சூட்டுகிறார்.

தாய் உள்ளம் இதனினும் நேர்த்தியானதாகத் தானே இருக்கும். எனவேதான், தாயே! உன் கரங் களில் தளைகளா? நான் இருக்கிறேன் தளைகளை உடைத்திட! என்று கூறும் தன் மக்களிடம் காட்டும் பரிவினைவிட, தளையா? என்ன தளை? இரும்பாபரண மல்லவா அது!! தங்கமாக இருந்தால் திருடு போய் விடும்! இது இரும்பு! ஒரு பயலும் திருட வரமாட் டான்!! இருக்கட்டும் தளை!! என்ற பாவனையில் அரசி யல் பேசும், தன் அருமருந்தன்ன மகனும் காமராஜ ரிடம் பற்றுவைத்து, முதலமைச்சராக்கியுள்ளார், போலும்.

"மற்றப் பிள்ளைகள் பரவாயில்லை. பதவி இல்லை என்றாலும், உலகிலே, அவர்கள் நற்பெயரெடுக்க முடி யும், நற்பணி புரியமுடியும்; பாபம்! இந்தப் பிள்ளை அப்படி அல்ல! மந்திரிப்பதவி இருந்தால்தான், நாலுபேர், மதிப்பார்கள்; அதனால்தான், பதவி அந் தப் பிள்ளைக்கு இருக்கட்டும் என்கிறேன்; இது விளங்கவில்லையா? என்று கூடக் கூறக்கூடும்.

ஆனால், தம்பி! ஒரு குடும்பத்தை அடுத்துக் கெடுக்கத் திட்டமிடும் சூழ்ச்சிக்காரர், என்ன செய் வார்கள் தெரியுமோ? எந்தப்பிள்ளை, ஊமையாகவோ, உன்மத்தனாகவோ இருக்கிறதோ, அந்தப் பிள்ளை யிடம், தந்திரமாகப்பேசி, சொத்துக்களைத் தம்பேருக்கு எழுதிவாங்கிக்கொள்வர்.

அதுபோலத்தான், இப்போது, வடநாட்டு ஏகாதிபத்தியம், காமராஜரின் பேச்சினைத் தனக்குத் துணையாக்கிக்கொண்டு, நம்மை அடக்கமடக்க, "காம ராஜர், திராவிடர்தானே! அவரே, திராவிடநாடு வேண்டாம் என்கிறாரே!" என்று பேசி வருகிறது.

"ஐயா! அது தெளிவில்லாதபிள்ளை" என்று கூறுவது குடும்பத்துக்கு இழுக்கல்லவா! அதனால் தான், நாம் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியா மல் திண்டாடவேண்டி இருக்கிறது.

விடுதலைக் கிளர்ச்சியை வலுப்பெறச் செய்யும் முயற்சியில், காமராஜர் ஈடுபடும் வரையில் காத்திருக்க முடியுமா! ஆகவேதான், தம்பி! நீயும் நானும், அவ ரால் ஏற்படும், இடையூறுதனையும் சமாளித்துக் கொண்டு விடுதலைக் கிளர்ச்சியை முறுக்கேறிய தாக்கவேண்டி இருக்கிறது. அதற்காகவே விடு தலைக் கிளர்ச்சி நடாத்திய தலங்களைக் காண அழைத் தேன். கண்டது போதும் என்று இருந்துவிடாதே. தலங்கள் வேறு பலவும் உண்டு. கண்டு, மற்றவர்க் கும் கூறிடு; அணிவகுப்பில் கொண்டுவந்து சேர்த்திடு.

அண்ணன்,

அண்ணாதுரை

மதிப்புரை:

விந்தியத்திற்குத் தெற்கே உள்ள பகுதிக்கும் வடக்கே உள்ள பகுதிக்கும் கலை, மொழி, நாகரிகம், பண்பாடு முதலிய எதிலும் ஒற்றுமை இல்லை; இவர்கள் வேறு இனத்தவர், அவர்கள் வேறு இனத்தவர் என்பது வரலாறும் பிற சான்றுகளும் கூறும் பேருண்மை. இதனை இன்று சிலர் உணர மறுத்தாலும் உண்மை அழிந்துவிடாது. அழியாத இந்த உண்மையை உணர்ந்து, ஒப்பி, போற்றிப் பாராட்டுவோர் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது.

அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் வளரவேண்டும் என்ற வேட்கையோடு, வளரத் தூண்டும் வகையில் திரு 'திராவிடப் பித்தன்!' அவர்கள் எழுதியுள்ள "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற நூல் அமைந்துள்ளது.

பொருளியல் சுரண்டல் ஒரு புறம் இருக்க, மொழி கலை இன்னோரன்னவற்றில் தென்னகத்தினர்—திராவிடர் — தனிக்குடும்பத்தினர் ஆமாறு எங்ஙனம் என்பதனை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

பொதுவாகக் காணப்படும் கருத்துரைகளைத் தோற்றுவாயாக அமைத்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய இம்மொழிகள் தமிழோடு கொண்டுள்ள உறவுகளையும் பிணைப்புக்களையும் தனித்தனியே விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ள முறை பாராட்டற்பாலது. பல இடங்களில், பல சான்றோர் கூற்றுக்களைத் தேடித்திரட்டித் தொகுத்து அளித்துள்ளார்.

நூலின் முன்னுரையில் நாவலர் நெடுஞ்செழியன் ....குறிக்கோளுக்கு ஆக்கம் தரும் வகையில் நல்ல பல ஆதாரங்களைத் திரட்டிக் காட்டி, அக்குறிக்கோளை நிலை நாட்டுவது இந்நூலின் நோக்கமாகும்.........' என்று பாராட்டியுள்ளது நூலின் சிறப்பை உரைக்கின்றது.

"திராவிட நாடு திராவிடருக்கே"
ஆசிரியர்: திராவிடப் பித்தன்.
வெளியீடு:
தமிழ் நூற்பதிப்புக் கழகம்
203, தக்கசாலை, சென்னை—1
200 பக்கங்கள்: விலை ரூ. 2.

"தேன்"

சிறுவர்க்கான இதழ். சிந்தனையைத் தூண்டும் பகுதிகள் அமைந்துள்ளன. சிறுவர் இதழ் என்ற பெயரில் எதை எதையோ எழுதி என்னென்னவோ செய்யும் இதழ்கள் மலிந்துவரும் நாட்களில் இது போன்ற நல்ல இதழ்களைக் காணும்போது மகிழுகின்றோம். 'வளரவேண்டும்' என்று விரும்புகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

தேன்போல் இனிக்கிறது 'தேன்' மருந்தாகிப் பயன்படட்டும்!

"தேன்"
தம்பி—தங்கைகளின் வார ஏடு.
ஆசிரியர்: தமிழ்நாசன்,
சென்னை—1
விலை 10 காசுகள்.

தலைமைக் கழக அறிக்கை—5/60

தி. மு. கழகப்
பொதுத் தேர்தல்

○○○○

1. தலைமைக் கழக அறிக்கை எண் 4/60, திருத்தப்பெற்றுக் கீழ்க்கண்டவாறு புது அறிக்கையாக வெளியிடப்படுகிறது.

2. 1959-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்டதிட்டங்கள், விதி 29 பிரிவு 4-ன்படி கழகத்தின் பல்வேறு அமைப்புக்கான தேர்தல் நாட்கள் கீழ்க்கண்டவாறு உறுதிசெய்யப் படுகின்றன:—

	அமைப்புகள்	தேர்தல் நடைபெறும் நாள்
(அ)	சிற்றூர்—பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள்	3—7—1960 ஞாயிறு
(ஆ)	நகரக்கிளைகள் (சென்னை நகர வட்டக் கிளைகள்) பெருநகரக் கிளைகள்	17—7—1960 ஞாயிறு
(இ)	வட்டக் கழகங்கள் (சென்னை நகரப் பகுதிக் கழகங்கள்)	14—8—1960 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்—(மாநில அமைப்புக் குழுக்கள்)	28—8—1960 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	11—9—1960 ஞாயிறு

3. தேர்தலை நடத்தும் முறைகள், கிளைகள், உறுப்பினர், தேர்தல் ஆணையாளர், வேட்பாளர் (அபேட்சகர்) ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத்தாள் போன்ற விவரங்கள், தலைமைக் கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டிருக்கின்றன. (தேர்தல் விதிமுறை வெளியீட்டை உரிய கட்டணம் செலுத்தித் தலைமைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.)

'அறிவகம்' சென்னை-13.
22—4—1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர்
தி. மு. க.

உழைப்பால் உயர்ந்த
ஆர்க்ரைட்

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" இது பழமொழி. உழைப்பு உயர்வடையச் செய்யும். உழைப்பால் உயர்ந்தவர் பலர். அவர்களுள் 'நமது ரிச்சர்ட் ஆர்க்ரைட்டும்' ஒருவர்.

கி. பி. 1732-ல் பிரஸ்டன் நகரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பதின்மூன்றாவது குழந்தையாக 'ரிச்சர்ட் ஆர்க்ரைட்' பிறந்தான். ஏழைக் குடும்பம். பதின்மூன்றாவது குழந்தை என்றால் அவனது இளமை வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று நினைக்கின்றீர்கள்? சொல்லமுடியாத துன்ப வாழ்வை அனுபவித்தான். அவன் இளமையில் பள்ளிக்குச் சென்றானா? வாயார உண்டானா? என்றால் எப்படி உண்டிருக்கமுடியும்? ஒருவேளை ரொட்டித் துண்டுக்கும் வழியின்றி வயிற்றுக்கு உணவு தேடும் நிலையில், செவிக்கு அவன் எங்ஙனம் உணவு தேட முடியும்?

ஆர்க்ரைட் சற்று வளர்ந்த பின் ஒரு முடிவெட்டும் தொழிலாளிக்கு உதவியாக அவனை அனுப்பி அத்தொழிலைக் கற்றுக்கொள்ளச் செய்தார்கள் அவன் பெற்றோர்கள். ஏடு தூக்கிப் பள்ளிக்குச் செல்லவேண்டிய பருவத்தில் ஆர்க்ரைட் கத்தி தூக்கிக் கடைக்குச் சென்றான்—கன்னத்தில் கண்ணீர் புரள! பந்தை எடுத்துக்கொண்டு பொழுதுபோக்க விளையாடச் செல்லும் பருவத்தில், கீழே விழும் குப்பையைப் பெருக்கி அறையைச் சுத்தப்படுத்த முற்படுவான்—தன் கடமையை முடிக்க. அவனும் தன் முதலாளி தரும் வசவுகளால் வளர்ந்து—உதைகளால் உயர்ந்து — அத்தொழிலையும் கற்றுக்கொண்டான்.

பின்னர் தன்னம் தனியாக தொழிலை நடத்தத் தொடங்கினான். அத்தொழிலிலேயே தோன்றி, ஊறி உழைத்து ஓடாய்ப்போனவர்களுக்கே போதுமான வாடிக்கை கிடைப்பதில்லை என்றால், இப்புதுத் தொழிலாளிக்கு! வரவேற்புக்கும் கண்கவர் வனப்புக்கும் வழியற்றுத் தரைமட்டத்திற்கும் இழிந்த அறையில் கடையமைத்த அந்த இளைஞனுக்கு வாடிக்கைக்காரர்கள் கிடைப்பார்களா? அதனால்தான் ஒரு பென்னிக்கு செய்துவந்த தொழிலை அரைப் பென்னியாக்கி வாழ்க்கை நடத்த முயன்றான். ஆனால் விளைவு நன்முடிவில் நிற்கவில்லை.

பின் அத் தொழிலுக்கு ஒரு முழுக்குப்போட்டுவிட்டுத் தலைமயிர் திரட்டும் வேலையில் நுழைந்தான்.

கோ. சனார்த்தனம்

'டோப்பா' மயிர் சூட்டிக்கொள்ளும் அந்தக் காலத்தில் இத்தொழில் முதலில் அவனைக் கொஞ்சம் உயர்த்திற்று. ஆனால் அந்த நாகரிகமும் தேய ஆரம்பிக்கவே ஆர்க்ரைட் அதையும் விடவேண்டியதாயிற்று.

ஆர்க்ரைட் தானே தன்னை உயர்த்திக்கொண்டு வந்தான். ஓய்வு நேரத்தில் பொறிகளைப் பற்றித் தன் வீட்டில் ஆய்வுசெய்து வந்தான். நூற்றல் இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆர்வமும் பெரும் போட்டியும் மக்களிடையே மண்டியிருந்த காலம் அது.

இதனைப்பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்த ஆர்க்ரைட் விஞ்ஞானப் பெருங்கடலிடைத் தானும் தன் கட்டுமரத்தைக்கொண்டு நீந்த முற்பட்டான். இந்த ஆராய்ச்சியில் ஓரேயடியாக முழுகிப்போய்விட்டதால் தன் தொழிலையே அடியோடு மறந்துவிட்டான். பிறகு என்ன? சொல்லமுடியாத வறுமை. உண்ண உணவில்லை. வறுமைப் பேயின் கொடும்பிடி அவனை — அவனது குடும்பத்தை வாட்டி வதைத்தது. ஒருநாள் அவனது மனைவி தனக்கு வந்த கோபத்தில் அவன் கண்டுபிடித்த சில புதுமாதிரியான பொறிகளை எல்லாம் உடைத்துவிட்டாள். அந்த அளவுக்கு வறுமை அவளது கோபத்தைத் தூண்டிவிட்டிருக்கிறது.

வறுமையினை விரட்டுவதற்கு ஒரு வழிகாண அவன் நாடு முழுவதும் அலைந்தான். அக்காலை அவனுக்கு உதவி செய்வதற்கு உற்ற நண்பர் ஒருவன் கிடைத்தான். அவன் பெயர் கே (Kay) அவன் வாரிஸ்டன் நகரத்தைச் சார்ந்தவன். கடிகாரம் செய்பவன். அவனும் ஆர்க்ரைட்டும் நூற்புப் பொறி கண்டுபிடிப்பதற்காகச் சேர்ந்து உழைத்தார்கள். இறுதியில் ஒரு இயந்திரத்தை 'பிரஸ்டன்' நகரில் உருவாக்கினார்கள். முயற்சி திருவினையாக்கிற்று. வெற்றி! வெற்றிதான்! ஆனால் முழுவெற்றியல்ல! ஏன்?

அக்காலத்தில் மக்கள் இயந்திரங்களை முற்றிலும் வெறுத்தார்கள். பல தொழிலாளிகளின் வேலை இழப்பிற்கு இயந்திரம் காரணமாய் இருக்கிறது என்பதுமட்டுமல்ல— இயந்திரம் என்றாலே இயற்கைக்கு மாறுபட்டது என்ற ஓர் வெறுப்பு. அதனால் கே என்பவர் செய்த 'பறக்கும் நூற்பொறி'யையும் ஹார்க்கிரீவ்ஸ் என்பவர் செய்த 'நூற்கும் ஜென்னி' என்ற பொறியையும் தூள் தூளாக நொறுக்கிவிட்டார்கள் ஆத்திரமடைந்த மக்கள். இந்நிலையில் ஆர்க்ரைட் எப்படித் தன் புதிய கண்டுபிடிப்பைப் பொதுமக்கள் முன் காட்டத் துணிவான்.

(15-ம் பக்கம் பார்க்க)

மெத்த மலிவு

— [கனகு] —

அவன் அலைந்தான் வேலைக்காக. நாடெங்கும் அலைந்தான். எத்தனை நாட்கள் உண்ண உணவின்றி, உறங்குவதற்கு — ஓய்வதற்கு இடமின்றி அவன் அல்லல் உழந்து, அலமந்திருக்கிறான் தெரியுமா? கடைசியாக அந்த ஊருக்குள் நுழைந்தான். அது அவனை வரவேற்கவில்லை, 'போ, போ' என்று வெருட்டியது. ஆட்கள் நிரம்பி வழியும் புகைவண்டியில், இனி ஒரு ஆளேனும் அங்கு புக முடியாது என்ற நிலையில் உள்ளே இருப்பவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு நிற்கும்போது, வண்டி புறப்படும் வேளை பார்த்து ஓடி வந்து தொத்திக்கொண்ட கடைசி ஆளுக்கு உள்ளே இடம் கிடைக்குமா? அங்கே உள்ளவர்கள், அவன் உள்ளே புகுந்துகொள்வதை அனுமதிப்பார்களா? அவனை உந்தி, நெட்டி வெளியே தள்ளக்கூடியவர்கள் எத்தனைபேர் அங்கே இருப்பார்கள்! வாயில் வந்தபடி திட்டுவோர் எத்தனை பேர்! அப்படித்தான் அந்த ஊரும். அங்கே படித்தவர்கள் நிறைய இருந்தார்கள். அது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர்களில் மிகப் பெரும்பாலோர் வேலை இல்லாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். அது அவனுக்குக் கசப்பாக இருந்தது. கசப்புத்தான். என்ன செய்வான். அங்கே ஒட்டிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்குமா என்று அவன் ஆராய்ந்தான். கிடைக்கும் போல் போன்றியது. புகைவண்டிப் பயணம் போக வந்த கடைசி ஆளைப்போல் அவன் அங்கே தொத்திக்கொள்ள முயன்றான். எப்படியோ தொத்திக்கொண்டு விட்டான். என்ன என்ன நேரும் என்று அவன் அங்கே எதிர்பார்த்தானோ, அவை அங்கே நேரவில்லை. அவற்றை விஞ்சியவை அங்கே நேர்ந்தன. உள்ளத்தில் உறுதியை ஏற்றிக்கொண்டான். இன்னல் வந்தவை அனைத்தையும் ஏற்றுக் கொண்டான்.

அந்த ஊரில் ஒரு தொழில் நிலையம். அங்கே ஒரு ஆள்வேண்டும். அவ்வூரில் புதிதாக நட்புப்பிடித்துக்கொண்ட ஒருவர் அவனை அந்தத் தொழில் நிலையத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்.

முதலாளி இடத்தில் அமர்ந்திருந்தவர் புதியவனை ஏற இறங்கப் பார்த்தார். எடைபோட்டார். தெரிந்துகொண்டார்— ஆள் வேலை இல்லாமல் தவிப்பவன் என்று. பேசினார்:

"இங்கு வேலை அதிகமிராது. அப்படியே இருந்தாலும் சும்மா உட்கார்ந்துகொண்டிருப்பதுபோல் அமர்ந்தபடி எழுதுகின்ற வேலை தான். காலையில் ஆறுமணிக்கெல்லாம் இங்கே வந்துவிடவேண்டும். இரவு ஏழுமணிவரை இருந்தாற் போதும். அதற்குமேல் இருக்க வேண்டியதில்லை."

திரும்பவும் அந்த முதலாளி வந்தவனை ஏற இறங்கப் பார்த்தார். சற்றுயோசித்தார். தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டார்.

"இதுவரை அந்த வேலையைச் செய்தவர் ஒரு பெரிய படிப்பாளி —பட்டதாரி. இருந்தாலும் அந்த ஆள் எனக்குப் பிடிக்கவில்லை. போகச்சொல்லிவிட்டேன். அவருக்கு நான் கொடுத்துவந்த சம்பளம் என்ன தெரியுமா?"

முதலாளி தன் கேள்விக்குப் பதிலை எதிர்பார்ப்பவர்போல்நிறுத்தினார். நண்பர் ஒன்றும் பேசாமல் மேல்விட்டத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

அவன் — புதியவன் எண்ணினான்: "குறைந்தது எண்பது ரூபாயாவது கொடுத்திருப்பார். எனக்கும் அவ்வளவு கொடுப்பாரா? கொடுத்தாலும், கொடுக்கலாம். நானும் பட்டம்பெற்றவன் தானே. எண்பது ரூபாயே வேண்டாம். ஒரு அறுபது கொடுத்தாற் கூடப்போதும், என்னுடைய இந்த நிலையில்......"

மேலும் அவன் எண்ணம் ஓடவில்லை. தடைபட்டு நின்றது.

முதலாளி பேசினார்:

"அவருக்கு நான் கொடுத்த சம்பளம் என்ன தெரியுமா?— அவர் நல்ல ஆள். மிகவும் திறமையானவர். அவர் இங்கு இருக்கும் வரை எனக்கு ஒரு தொந்தரவுமே இல்லை. எல்லாவற்றையும் தானே கவனித்துக்கொண்டார்." சொல்ல வந்ததை விட்டுவிட்டு வேறு எதையோ சொல்லிக் கொண்டு போனார் அவர். இடையில் மறந்து போனார், அப்படிப்பட்ட நல்ல ஆளை ஏன் அவர் கோட்டை விட்டார் என்று மற்றவர்கள் மரியாதைக்காகக் கேட்காமல் விட்டாலும், தமக்குள் நினைத்துக் கொள்வார்களே என்பதை.

"அவருக்கு நான் மாதச் சம்பளம் முப்பது ரூபாய் கொடுத்தேன்."

புதியவன் தலையில் வெடிகுண்டு வீழ்ந்தது.

"ஐயோ, முப்பது ரூபாயா! அந்த முப்பது ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு ஆள் எப்படிக் காலந்தள்ள முடியும்? அட அநியாயமே, இத்தனை கொடுமையா! காலையில் ஆறு மணியிலிருந்து இரவு எட்டுமணி வரை உழைக்கவேண்டும். அதற்குச் சம்பளம் முப்பது ரூபாய்!"

அவன் அப்படிச் சொல்லவில்லை. உள்ளம் ஓலமிட்டது. அவன் பெருமூச்செறிந்தான். தரையில் நிற்க முடியாமல் சாய்ந்து விடுவான் போலிருந்தது. பக்கத்துச் சுவரைப்பிடித்துக்கொண்டான்.

திரும்பவும் முதலாளி பேசினார்:

"உங்களுக்கு இன்னும் குறையத்தான் கொடுக்கவேண்டும். ஏனென்றால் நீங்கள் புதிய ஆள். இங்குள்ள கணக்குகளில் ஒன்றும் உங்களுக்குப் பிடிபடாது. அதோடு இங்கே வேலையும் அதிகமில்லையே! —இருந்தாலும் பாதகமில்லை. அவருக்குக் கொடுத்த அந்த முப்பது ரூபாயையே கொடுக்கிறேன் உங்களுக்கும்."

முதலாளி அவனை உற்று நோக்கினார். அந்தப் பார்வை மனிதப் பார்வை அல்ல. விலங்

குப் பார்வை என்றும் சொல்ல் முடியாது. — விலங்குகள் இரக்க உணர்வு உடையனவாயிற்றே.

அந்தக் கொடிய முகத்தை அவ னால் ஏறிட்டு நோக்க முடியவில்லை. அவன் சிந்தித்தான். பதிலுரை பகராமல் சிந்தித்தான்.

"என்ன செய்யலாம்? இந்த முப்பது ரூபாயை ஏற்றுக்கொண்டு இங்கே உழைப்பதற்கு ஒப்புக் கொள்ளலாமா? வாழவேண்டுமே! வேறு வழியொன்றும் தோன்ற வில்லையே! — அட பாதகர்களே! கெடுமதியாளர்களே! மற்றவர் களின் துன்பத்தை நன்றாக உணர்ந்துகொண்டு, அவர்களுக் குத் தம்மைவிட்டால் வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு மனத்தில் வந்தபடி எல் லாம் நிபந்தனை விதிக்கின்றீர் களே! மனத்தில் தோன்றியபடி எல்லாம் கூலியைக் குறைக்கின் றீர்களே! உங்களுடைய இந்தக் கொடிய தன்மைக்கு, கொடிய செய் கைக்கு, கொடிய நடத்தைக்கு ஒரு முடிவே கிடையாதா? ஐயோ, என் செய்வேன்! "களையாத் துன்பம், களையாதொழியாய், வழி வேறில்லை! என்று யாரிடம் வேண் டிக் கொள்வது? யாரை வேண்டிக் கொண்டாலும், துன்பம் ஒழிய வழி இல்லையே! என் செய்வேன்! என் செய்வேன்!"

உள்ளத்துள் புழுங்கிப் புழுங்கி அழுதான் அவன். கரை தாண்டா மாகடல் அன்ன அவன் உள்ளக் கடல் ஒலி என்னும் உடைப்பு எடுத்துக்கொள்ளாமல் பேரலையைப் பொங்கவிட்டது. உள்ளம் எழுப்ப வேண்டிய பேரொலியை உணர்வு மூலம் காட் டியபடி நின்றான். அவன் நெடு நேரம் நின்றான். நெடுமரம்போல் நின்றான். முடிவு என்ன? முடி வைச் சொல்லாக வடிக்க முடிய வில்லை அவனால். உடலை இரும் புக்கு இணையாக்கிக்கொண்டு, உழைப்பதற்கு ஒப்புக்கொண்டான் தலையசைப்பால். அந்தச் சிறு தொகையை ஏற்றுக்கொண்டு உறங்கி விழிப்பது முதல் உறங்கப் போகும் வரை இறங்கிக் இறங்கி வீழ்ந்தவண்ணம் கெடுமதியாள ரின் நன்மைக்காக, இதயமற் றோரின் இரும்புப்பெட்டியை நிரப்பு தற்காக உழைக்க ஒப்புக்கொண் டான். வேறு வழியே இல்லையே! என் செய்வான் அவன்? ஐயகோ, இந்த நாட்டில் உழைப்பு மெத்த மலிவு; மெத்த மெத்த மலிவு! ○

தலைமைக்கழக அறிக்கை: 6/60

உறுப்பினர் சேர்த்தல்--புதுப்பித்தல்

1. தலைமைக்கழக அறிக்கை 11/59-ன்படி 31—9—59-ம் நாளுக்குள் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்கள் மட்டுமே தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டனர்.

2. பின்னர் மாவட்டச் செயலாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க 31—12—59-ம் நாளுக்குள் பதிவு செய்து கொண்ட உறுப்பினர்களும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

3. உறுப்பினர்களைச் சேர்த்தும் புதுப்பித்தும் வைத்துக் கொண்டு தவிர்க்கமுடியாத காரணங்களால் குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்பத் தவறிய கிளைகளின் வேண்டு கோளுக்கிணங்க, அவைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகை யில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர் விண்ணப்பத்தாள் களைத் தலைமைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் **1960 மே திங்கள் 10-ஆம் நாள்** என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

4. 1960 மே திங்கள் 10-ஆம் நாளுக்குப் பிறகு அனுப்பி வைக்கப்பெறும் விண்ணப்பத் தாள்கள், 1960 அக்டோ பர் திங்கள் 1-ஆம் நாளுக்குப் பிறகுதான், பதிவுசெய்து கொள்ளப்பட்டு உரிமைச் சீட்டுக்கள் வழங்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை-13
22—4—1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர். தி. மு. க.

13-ம பக்கத் தொடர்ச்சி

எனவே ஆர்க்ரைட் 'நாட்டிங் ஆம்' என்ற நகருக்குச் சென்று அங்கு 'ரைட்' என்பவரைச் சந் தித்துத் தனக்கு உதவிசெய்யும்படி கேட்டான். உதவி கிடைத்தும் அவன் முயற்சி எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

பின்பு 'ஸ்ட்ரட்' என்பரைக் கண்டு உதவி வேண்டினான். அவர் அவனுடன் கூட்டாக நின்று உத வியதால் கி. பி. 1769-ல் நாட்டிங் ஆமில் உரிமைப் பதிவு செய்யப் பட்ட நூல் ஆலை ஒன்று உலகில் புதிதாகத் தோன்றியது.

பின்னரும் பல இடையூறுகள் அவனைத் தொடர்ந்தன. ஆனால் அவை அவனால் முறியடிக்கப்பட் டன. லங்காஷையர், டெர்பிஷையர், நியூலானர்க் ஆகிய இடங்களில் ஆலைகள் நிறுவப்பட்டன. பின் டெர்பிஷயரின் தலைமை நகரத் தலைவனாக உயர்த்தப்பட்டான். அதனையடுத்து ஆங்கில மன்னன் மூன்றும் ஜார்ஜால், வீரன் என்ற பட்டம் சூட்டப்பெற்றது. அவ னது இறுதி மூச்சு கி. பி. 1792-ல் நின்றது.

ஆர்க்ரைட் வறுமையின் வாட் டத்தில், துன்பத்தின் துரத்தலி லும் முயற்சியை என்றுமே கைவிட்டதில்லை. மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது மேன் மேலும் உழைத்தான். சலியா ஊக்கமும் குலையா உழைப்பும் அவனுக்கு இறுதியில் வெற்றி யைத்தந்தது. ஏழ்மையில் தொடங் கிய அவன்வாழ்வு ஏற்றத்தில் முடிந்தது குன்றாது உழைத்தான். குறையாத பெருமையை அடைந் தான்.

புாமரனாய்,பாமரியாய்த்தோன்றிப் பார்புகழும் பெருமையைப் பெற் றான். உலக வரலாற்றில் என்றென் றும் தனக்கென்று ஒரு இடத்தை உரிமையாக்கிக்கொண்டான். அவ னது உழைப்பும், வெற்றியும்நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. நாமும் அப்பாதையில் நடக்க முயல்வோமாக! ●

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.